05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# திருமந்திரத்தில் பசுக் கோட்பாடு

# TEORI 'PASU' DALAM THIRUMANTHIRAM

ஜெகதிஸ் த/பெ புனாளன்

JAGADHISH A/L PUNALAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# திருமந்திரத்தில் பசுக் கோட்பாடு

ஜெகதிஸ் த/பெ புனாளன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வானது தமிழ் இலக்கிய முதுகலைப்
பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது
(ஆய்வியல் முறை)

தமிழ்மொழிப் பிரிவு, தற்கால மொழிகள் துறை
மொழிகள் மற்றும் தொடர்பியல் புலம்
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# TEORI 'PASU' DALAM THIRUMANTHIRAM

JAGADHISH A/L PUNALAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT
UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA SASTERA
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UPSI/IPS-3/BO 32
Pind : 00 m/s: 1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**Sila tanda (√)**

| | |
|---|---|
| Kertas Projek | |
| Sarjana Penyelidikan | √ |
| Sarjana Penyelidikan dan Kerja Kursus | |
| Doktor Falsafah | |

**INSTITUT PENGAJIAN SISWAZAH**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada 15 (hari bulan) 3 (bulan) 2021

**i. Perakuan pelajar :**

Saya, JAGADHISH A/L PUNALAN , M20142002409, FBK
(SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk TEORI 'PASU' DALAM THIRUMANTHIRAM adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia:**

Saya, Dr. MANONMANI DEVI A/P M.A.R ANNAMALAI (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk TEORI 'PASU' DALAM THIRUMANTHIRAM (TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh SARJANA SASTERA PENYELIDIKAN (SILA NYATAKAN NAMA IJAZAH).

15/03/2021
Tarikh

Tandatangan Penyelia

Assoc.Prof. Dr. Manonmani Devi M.A.R. Annamalai
Faculty of Languages and Communication,
Sultan Idris Education University,
35900 Tanjong Malim, Perak, Malaysia

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**INSTITUT PENGAJIAN SISWAZAH /**
***INSTITUTE OF GRADUATE STUDIES***

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: TEORI 'PASU' DALAM THIRUMANTHIRAM

No. Matrik /*Matric's No.*: M20142002409

Saya / *I* : JAGADHISH A/L PUNALAN

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*
4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.* |
| ✓ | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar/ Signature)

Tarikh: 10/06/2024

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Assoc.Prof. Dr. Manonmani Devi M.A.R. Annamalai
Faculty of Languages and Communication,
Sultan Idris Education University,
35900 Tanjong Malim, Perak, Malaysia

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**நன்றியுரை**

சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பிற்காகத் ‘திருமந்திரத்தில் பசுக் கோட்பாடு’ என்னும் தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பெற்றது. இவ்வாய்வுப் பணி இனிதே நிறைவு பெறத் திருவருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனின் திருவடியை முதலில் என் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். மேலும், இவ்வாய்வினை மேற்கொள்ள எனக்கு அனுமதியளித்த சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கும் எனது நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

தொடக்கத்திலிருந்து இறுதிவரை இவ்வாய்வுப்பணி உருவாக்கம் பெறப் பல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தந்த ஆய்வு நெறியாளர் முனைவர் திருமதி மனோன்மணி தேவி அண்ணாமலை அவர்களுக்கும் இவ்வினிய வேளையில் என் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

எனக்கு வழிகாட்டிய என் பெற்றோர் திரு, திருமதி புனாளன் சண்முகவள்ளி அவர்களுக்கும் என் மனைவி திருமதி அகல்யா சந்திரன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக இவ்வாய்வு சிறப்புடன் நிறைவு பெறப் பல வழிகளில் உதவி நல்கிய அனைத்து நல்லுள்ளங்களையும் இவ்வேளையில் நினைவு கூறுகின்றேன். நன்றி.

ஜெகதிஸ் த/பெ புனாளன்
M20142002409
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# ஆய்வுச் சாரம்

திருமத்திரத்தின் ஆறாம் தந்தித்தில் இடம்பெற்றுள்ள செய்யுள்கள் பசுக் கோட்பாட்டினை வெளிபடுத்துகின்றனவா என்பதனை ஆராய்ந்து விளக்குவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். 'திருமந்திரத்தில் பசுக் கோட்பாடு' என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சைவ சமய தோத்திர நூல்களில் ஒன்றான திருவருட்பயனின் பத்து அதிகாரங்களில் இரண்டாம் அதிகாரமான உயிரவை நிலையே இவ்வாய்வின் கோட்பாடாக அமைகின்றது. திருவருட்பயனின் உயிரவைநிலை அதிகாரத்தில் உயிர் அதாவது பசுவின் இயல்புகளைப் பத்தாக வகுத்து நூற்பாக்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இந்நூற்பாவின் விளக்கத்தைத் துணைக்கொண்டே உயிரின் பத்து இயல்புகள் திருமந்திரத்தின் ஆறாம் தந்திர செய்யுள்களில் வெளிபடுகின்றனவா என்பதனை இந்த ஆய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், இவ்வாய்வில் திருமந்திரத்தின் ஆறாம் தந்திர செய்யுள்களில் கூறப்பட்டுள்ள உயிரின் இயல்புகளைத் திருவருட்பயனின் உயிரவைநிலை கோட்பாட்டின் அடிப்படையில் பகுத்தாய்ந்து விளக்கப்பட்டுள்ளன. இறுதியாகத் திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தின் உயிர் இயல்புகள் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவங்களையும் விளக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் திருவருட்பயன் கூறும் உயிரின் பத்து இயல்புகளில் ஒன்பது இயல்புகள் மட்டுமே திருமந்திரத்தின் ஆறாம் தந்திர செய்யுள்கள் விவரிக்கின்றன என்பதை இவ்வாய்வின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது, திருமந்திரத்தின் ஆறாம் தந்திர செய்யுள்கள் உயிரின் அனாதி நிலை தொடர்பான கருத்துகளைத் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. தொடர்ந்து, உயிரின் இயல்புகளில் இரண்டாம் இயல்பான 'உயிர்கள் மூவகையினர்' பற்றின கருத்துகளே அதிகமான செய்யுள்களில் வெளிப்படுகின்றன என்பது இவ்வாய்வின் வழி அறியப்படும் கருத்து. முடிவாகத் திருமந்திரத்தின் ஆறாம் தந்திர செய்யுள்களில் இடம்பெறும் உயிரின் இயல்புகள் வாழ்வியல் தத்துவங்களையும் வெளிப்படுத்துகின்றன. ஆக, திருமந்திரம் சைவ சித்தாந்த அடிப்படையிலும் வாழ்வியல் அடிப்படையிலும் இயற்றப்பட்ட நூல் என்பது உறுதியாகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**TEORI 'PASU' DALAM THIRUMANTHIRAM**

**ABSTRAK**

Kajian ini bertujuan untuk menganalisis sifat-sifat 'pasu' (jiwa) dalam teori 'pasu' (jiwa) yang terkandung dalam lirik lagu-lagu *Thirumanthiram*. Kajian ini akan menerangkan sifat 'pasu' yang membawa maksud sifat jiwa yang terpancar dalam lirik lagu-lagu *Thirumanthiram.* Kajian ini berbentuk kaedah kualitatif dan data-data bagi kajian ini telah diperoleh melalui cara menganalisis lirik lagu-lagu *Thirumanthiram*. Buku *Thirumanthiram* yang memiliki 3000 buah lagu berkonsepkan agama Hindu. Kajian ini hanya berfokus kepada 130 buah lirik lagu berdasarkan teori 'Pasu' yang menjelaskan 10 sifat jiwa. Kaedah penerangan digunakan untuk menjelaskan falsafah kehidupan yang terkandung dalam lagu-lagu *Thirumanthiram* berdasarkan sifat-sifat 'pasu'. Hasil dapatan kajian menunjukkan bahawa sebanyak sembilan daripada sepuluh sifat 'pasu' yang terkandung dalam lirik lagu-lagu *Thirumanthiram*. Bilangan sifat 'pasu' yang kedua iaitu *Uyir Muuvakaiyinar* terkandung dalam 120 buah lirik lagu *Thirumanthiram.* Manakala sifat 'pasu' yang pertama iaitu *Uyirkalin Thogai* adalah paling kurang iaitu sebanyak 26 buah lirik lagu. Kajian ini juga menunjukkan bahawa lirik lagu-lagu *Thirumanthiram* mempamerkan falsafah kehidupan manusia. Kesimpulannya, dapatan kajian ini terbukti bahawa lirik lagu-lagu *Thirumanthiram* digubal berasaskan unsur-unsur sifat 'pasu' dan falsafah kehidupan manusia secara tersurat dan tersirat. Teori 'pasu' ini dapat memberi kesedaran menyedari kewajipan jiwa untuk menikmati kerahmatan di tapak kaki Tuhan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**'PASU' THEORY IN THIRUMANTHIRAM**

**ABSTRACT**

This study aims to analyse the nature of 'pasu' (soul) in the theory of 'pasu' (soul) contained in the lyrics of *Thirumanthiram* songs. This study explains the nature of the 'pasu' which carries the meaning 'nature of the soul' radiated in the lyrics of *Thirumanthiram* songs. This study was carried out in the form of qualitative methods and the data for this study had been obtained by analysing the lyrics of *Thirumanthiram* songs. *Thirumanthiram's* book, which has 3000 songs, is vastly related with a Hindu concept and religious belief. This study only focuses on 130 song lyrics based on the theory of 'Pasu', which explicitly explains the 10 nature of the soul. Descriptive methods are used to explain the philosophy of life contained in *Thirumanthiram* songs based on the nature of 'Pasu'. The results of the study show that as many as nine of the ten 'pasu' nature contained in the lyrics of *Thirumanthiram* songs. The second nature of 'pasu', the *Uyir Muuvakaiyinar*, is contained in 120 lyrics of *Thirumanthiram* songs. The first 'pasu' nature of *Uyirkalin Thogai* was found in at least 26 lyrics. This study also shows that the lyrics of *Thirumanthiram* songs reflect the philosophy of human life. In conclusion, the findings of this study proved that the lyrics of *Thirumanthiram* songs are formulated based on the elements of the nature of 'pasu' and philosophies of human life, both literally and implicitly. This 'pasu' theory can give awareness to many in realizing the obligation of the soul to enjoy the humble blessings and grace at the feet of the God.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **ஆய்வாளர் உறுதிமொழி** | ii |
| **PENGESAHAN PENYERAHAN DISERTASI** | iii |
| **நன்றியுரை** | iv |
| **ஆய்வுச் சாரம்** | v |
| **ABSTRAK** | vi |
| **ABSTRACT** | vii |
| **பொருளடக்கம்** | viii |
| **அட்டவணைப் பட்டியல்** | xi |
| **வரைபடப் பட்டியல்** | xiii |
| **சுருக்கக் குறியீட்டு விளக்கம்** | xiv |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 5 |
| 1.3 ஆய்வின் சிக்கல் | 10 |
| 1.4 ஆய்வின் முக்கியத்துவம் | 11 |
| 1.5 ஆய்வின் நோக்கம் | 13 |
| 1.6 ஆய்வின் வினா | 13 |
| 1.7 ஆய்வு எல்லை | 14 |
| 1.8 ஆய்வு ஆதாரம் | 15 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள் 15

1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள் 16

1.9 கலைச்சொல் விளக்கம் 16

1.9.1 திருமந்திரம் 16

1.9.2 சைவசித்தாந்தம் 18

1.10 தொகுப்புரை 19

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 20

2.2 திருமந்திரம், திருமூலர் ஒட்டிய ஆய்வுகள் 21

2.3 சைவசித்தாந்தம் ஒட்டிய ஆய்வு 24

2.4 ஆய்வுக்குத் தொடர்புடைய நூல்கள் 24

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.5 தொகுப்புரை 30

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 31

3.2 ஆய்வின் வடிவமைப்பு 32

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 35

3.4 ஆய்வு அணுகுமுறை 36

3.5 தரவுச் சேகரிப்பு முறை 37

3.6 தரவுப் பகுப்பாய்வு முறை 38

3.7 ஆய்வுக் கோட்பாடு 39

3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 49

3.9 தொகுப்புரை 50

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 4 பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்**

4.1 முன்னுரை 51

4.2 திருமந்திர அதிகாரங்கள் 52

4.3 பகுப்பாய்வு 57

4.4 தொகுப்புரை 200

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 201

5.2 ஆய்வு கண்டுபிடிப்பு 202

5.3 ஆய்வு முடிவு 206

5.4 வாழ்வியல் தத்துவங்கள் 220

5.5 ஆய்வுப் பரிந்துரைகள் 224

5.6 முடிவுரை 226

**மேற்கோள் நூல்கள்** 227

**பின்னிணைப்பு** 230

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**


4.1 சிவகுரு தரிசனம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 231

4.2 திருவடிப்பேறு அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 232

4.3 ஞாதுரு ஞான நேயம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 233

4.4 துறவு அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 234

4.5 தவம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 235

4.6 தவ நிந்தை அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 236

4.7 அருளுடைமையின் ஞானம் வருதல் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 237

4.8 அவவேடம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 238

4.9 தவவேடம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 238

4.10 திருநீறு அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 239

4.11 ஞானவேடம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 239

4.12 சிவவேடம் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 240


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.13 அபக்குவன் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 241

4.14 பக்குவன் அதிகாரத்தின் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள உயிரின் இயல்புகள் 242

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## வரைபட பட்டியல்

**வரைபட எண்** **பக்கம்**


3.1 ஆய்வு வடிவமைப்பு 33

3.2 ஆய்வுக் கட்டமைப்பு 35

3.3 கோட்பாட்டுக் கட்டமைப்பு 49


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| பி.அ | பின்னிணைப்பு அட்டவணை |
| திருவருட் | திருவருட்பயன் |
| திருமந் | திருமந்திரம் |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

“சைவசித்தாந்தம் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுகிற தன்மையை உணர்த்துவதாகும். இத்தன்மை கி.மு. 3000 ஆண்டிற்கு முன் சிந்துவெளி நாகரிகத்திலே தொடங்கியதாகும். இதில் உருவவழி, அருவவழி வழிபாடு என்பன காணப்படுகின்றன. சைவ சமயத்தவர்கள் இதனைக் கைக்கொள்ளும் போது சைவசித்தாந்தம் எனப் பெயர் பெறுகிறது (மயில்வாகனம், 1998). சுருங்கக் கூறின் சைவசித்தாந்தம் சிவனையே மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் என்பதில் எந்த ஓர் ஐயமும் இல்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருமூலர் திருமந்திரத்தில் ‘சித்தாந்தத்தே சிவன் முத்தி சித்திக்கும்’, ‘தற்சிவம் கண்டோர் சைவ சித்தாந்தரே’, ‘சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே’ என்று சைவசித்தாந்தத்தின் தொன்மையை உணர்த்தியுள்ளார். “தமிழ் அறிஞர்கள் மட்டுமல்லாது மேலை நாட்டினரான ஜி.யு.போப் சைவ சித்தாந்தம் திராவிட அறிவின் சிறந்த வெளிப்பாடு” (முருகவேள், 1984) என்று கூறுகிறார். இதன்வழி சைவசித்தாந்தத்தின் தொன்மையை அதன் சிறப்பும் பன்னாட்டு அறிஞர்களும் அறிந்துள்ளமையை உணர முடிகின்றது.

சைவ சமயச் சான்றோர்களுக்கு பலவகையில் சைவசித்தாந்த நூல்கள் உறுதுணையாக இருந்துள்ளன என்று கூறுகையில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை. சைவ சமயம் தொடர்பான பல தத்துவக் கருத்துக்களை முறையே வழங்குவனவும் சித்தாந்தச் சாத்திரங்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சித்தாந்த சாத்திரங்கள் தோன்றிய காலங்களும் அதற்கான காரணங்களும் ‘சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி’ என்ற புத்தகத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. “காலக் கணிப்பின்படி இம்மெய்கண்ட சாத்திரங்கள் கி.பி. 12ஆம், 14ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தால் ஆனது. இக்காலப் பகுதியை வரைந்து கொண்டு இவையெழுந்ததற்கான காரணங்கள் குறித்தாராயும் ஆய்வியலாளர் சிலர், 372 பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றனர். அதில் சில; இக்காலப் பகுதிக்குரிய (சிவபாத சேகரன் எனச் சிறப்பிக்கப்பெற்ற) முதலாம் இராஜராஜன் முதல் முதலாம் குலோத்துங்கன் வரையிலான சோழ மன்னர்கள் சைவத்தை இராஜாங்க மதமாகக் கொண்டு பேணியமையாலான சைவ பக்திக் கூர்ப்பு மிகுதி ஒன்று, சைவத் திருமுறைகளால் விளைந்த மெய்ஞ்ஞான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உள்ளுணர்வுந்துதல் ஒன்று, அக்காலம் சமய ரீதியான வாதப் பிரதிவாதங்கள் மலிந்திருந்தமை ஒன்று, அபேத, பேதாபேத, பேதவாதிகளாகிய சங்கர, ராமாநாஜ, மத்வ பரம்பரையினரின் பிரசாரங்கள் தென்னாட்டில் அதிகரித்திருந்தமை ஒன்று என்பன அவை. இவற்றுள் இரண்டாவது தவிர்த்து ஏனைய மூன்றும் அதற்கான பொதுக் காரணமும், இரண்டாவதும், நாம் மேலே அவதானித்தவையுங் கூட அதற்கான சிறப்புக் காரணமும் ஆம்" (கந்தையா, 1998). இதன்வழி பதினான்கு சாத்திரங்கள் தோன்றிய காலமும் அதோடு மட்டுமின்றி அவை தோன்றுவதற்கான காரணமும் மிகத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

தொடர்ந்து சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களை எடுத்துரைக்கும் மெய்கண்ட சாத்திரங்கள் 14 என்பது,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

என்ற பாடலில் வெளிபடுத்தப்பட்டுள்ளது. அவை,

1. திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்
2. உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசங் கடந்தார்
3. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாச்சாரியார்
4. சிவஞானசித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்
5. சிவஞானபோதம் - மெய்கண்ட தேவர்
6. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


7. திருக்களிற்றுப்படி பாடியார் - தென்கடவூர் உய்ய வந்த தேவனார்

8. இருபா இருபஃது - அருணந்தி சிவாச்சாரியார்

9. வினா வெண்பா - உமாபதி சிவாச்சாரியார்

10. போற்றிப் பஃறோடை - உமாபதி சிவாச்சாரியார்

11. கொடிக்கவி - உமாபதி சிவாச்சாரியார்

12. நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாச்சாரியார்

13. உண்மைநெறி விளக்கம் - உமாபதி சிவாச்சாரியார்

14. சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாச்சாரியார்

போன்றவையாகும் (கிருஷ்ணவேணி, 2008).

பதி என்பவன் இறைவன், இவனே அனைத்து உலகுக்கும் உயிர்களுக்கும் முதல்வனாய் இருப்பவனாவான். இதனையே "அனைத்துலகுக்கும் உயிர்களுக்கும் தனி முதல்வனாயிருப்பவன் எவனோ, அவனே பதியாம்" (கந்தசாமி, 1978) என்று பதியைப் பற்றி விளக்கியுள்ளார் கந்தசாமி. பசு என்றால் ஆன்மா எனக் கருதப்படுகிறது. இவ்வான்மா பாசத்தாற் கட்டுண்டிருப்பதால் பசு என்று அழைக்கப்படுகின்றது (மயில்வாகனம், 2000). தொடர்ந்து, பாசம் எனப்படுவது "ஆன்மாக்களைக் கட்டிய கயிறு போல பற்றியிருப்பதால் அது பாசம் என அழைக்கப்படுகின்றது. பாசத்தைப் பந்தம், மலம், தளை என்றும் அழைப்பர். இப்பாசம் மூவகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை ஆகும்" (கொழும்பு விவேகாநந்த சபை, 1978).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தோத்திர நூலாகக் கருதப்படும் பன்னிரு திருமுறைகளுள் பத்தாவது திருமுறையைப் பாடியவர் திருமூலர் ஆவார். திருமந்திரம் திருமூலர் எனும் யோகியால் இயற்றப்பட்டது. இவர் மூவாயிர ஆண்டு காலம் ஆழ்ந்த தியான நிலையில் அமர்ந்து வாழ்ந்ததாகவும், ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு பாடல் வீதம் மொத்தம் மூவாயிரம் பாடல்களை எழுதியுள்ளார். முழுமையாகச் சிவப் பெருமானை நினைத்துத் தியானத்தில் அமர்ந்திருக்கும் திருமூலர் ஓராண்டுக்கு ஒரு முறை கண் விழித்து ஒரு பாடலை எழுதியபின் மீண்டும் தியான நிலைக்குச் சென்று விடுவார். ஆக, இதன் வழி திருமூலர் மூவாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்ததும் திருமந்திரத்தை இயற்றி முடிக்க மூவாயிரம் ஆண்டு காலம் எடுத்துக்கொண்டதும் உறுதியாகின்றது. திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள மூவாயிரம் பாடல்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவைகளே (கிருஷ்ணன், 2009).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவசித்தாந்த அடிப்படையில் அடங்கும் சைவ சாத்திர நூலான திருவருட்பயனில் பேசப்படும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களில் ஒன்றான பசு அதவாது உயிர் என்றழைக்கப்படும் இவ்வியல்பு சைவ சமயத் தோத்திர நூலான திருமந்திரத்தில், கூறப்பட்டுள்ளனதா என்பதை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## 1.2 ஆய்வுப் பின்னணி

“சைவ சமயத்தின் முடிந்த முடிபான கொள்கை சைவ சித்தாந்தம் என்று கூறப்படுவது சர்ச்சைக்குரிய ஒன்றாகக் கருதப்படுகிறது. சைவம் சிவனோடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொடர்புடையது (அருணாச்சலம், 2002). சைவ சமயத்தின் தத்துவக்கொள்கை சைவசித்தாந்தம் எனப்படும். சித்தாந்தம் எனும் சொல் சித்தத்தின் அந்தம் என்று பிரித்துப் பொருள் கொள்ளப்படும்போது உள்ளத்தினால் எடுக்கப்படும் முடிவு என்று விளங்கிக் கொள்ளப்படுகிறது. திருமூலர் சைவ சித்தாந்தத்திற்குத் தரும் விளக்கம் இந்த இடத்திற் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. 'சைவசித்தம் தெரிவித்த அந்தம்' என்று திருமூலர் விளக்கந் தருகிறார். இந்த வகையிற் திருமந்திரப் பாடல் (1513) தரும் விளக்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

> சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்
> சைவம் தனையறிந்தே சாருதல்
> சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீங்குதல்
> சைவம் சிவானந்தம் சாயுச்சியமே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இப்பாடலில் 'சிவம்', 'உயிர்' என்ற இருபொருட் கலப்பு 'சைவம்' எனப்படுகின்றது. சிவம் அறியும் முறை, சைவம் அடையும் முறை. அதிலும் சிவத்தை அறிந்த பின்னர் அடையும் முறையே சைவம்" (கிருஷ்ணவேணி, 2008).

"பதி, பசு, பாசம் என்னும் திரிபதார்த்தங்களின் நிச்சயமே சித்தாந்தமாகும். மூன்றும் அநாதியாய்யுள்ளன. என்றும் உள்ளது, பேரறிவுடையதும், ஆனந்த சொரூபமுடையதும் பதியாகும். பசு, பதியைப்போன்று அநாதியாய்யுள்ளதும் அறிவுடைய பொருளுமாயினும் கன்மம், மாயையினாற் கட்டுப்பட்டதாகும். பாசம் அனாதியாய்யுள்ளதாயினும் அறிவில்லாச் சடப்பொருளாகும். இவ்வுண்மைகளைக் கூறும் நூல்களே சித்தாந்த சாத்திரமாகும்" (இளையதம்பி, 1978). சுருங்கக் கூறின் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளை விளக்கும் வண்ணமாகவே சைவ

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சித்தாந்தம் உருவெடுத்துள்ளது எனலாம். மேலும், சைவசித்தாந்தத்தில் இந்த மூன்று கூறுகளும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

“இது குறள் வெண்பாக்களால் ஆனது; பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துக் குறள்கள் உண்டு. இறைவனது இயல்பு கூறும் முதல் அதிகாரம் பதிமுது நிலை என்னும் பெயருடையது. ஏனைய அதிகாரங்களின் பெயர்களும் இவ்வாறே அவை கூறும் பொருளின் இயல்பை விளக்குந் தன்மையன. அவை உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பன” (கொழும்பு விவேகாநந்த சபையினார், 1978). அவையே திருவருட்பயன் எனும் நூலாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முறையே சாத்திர நூல்கள் பதினான்கு தோத்திர நூல்கள் பன்னிரெண்டு ஆகும். தோத்திர நூல்களுள் திருமந்திரமும் அடங்கும். திருமந்திரம் பத்தாம் திருமுறையில் அடங்கும். இத்திருமந்திரத்தில் மொத்தம் 9 தந்திரங்கள் இடம்பெற்றுள்ளன. திருமந்திரம் என்பது தெய்வீகச் சிந்தனை, வழிபாடு மற்றும் சிவ பெருமானைப் பற்றியக் கருத்துகளைக் கொண்டதாகும். இது போன்று முற்றிலுமாக இந்து சமயத்தை விவரிக்கும் நூலாக இருப்பதால் இந்து சமயத்தைச் சார்ந்தோரும் இந்து சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டவர்களும் சிவ வழிபாடு கொண்டவர்களும் மட்டுமே இந்நூலில் கூறப்பட்டிருக்கும் உன்மையான அழகான கருத்துகளை விளங்கிக் கொண்டு இன்புற முடியும். “உலகநிலையில் மெய்யறிவுத்தவத்தில் முன்மையும் முதன்மையும் பெற்றுத் திகழ்ந்தவர் நம் பெருஞ்சித்தரான திருமூலர். அவர் கொடுத்த மெய்யறிவுக் கொடையான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருமந்திர நூல் உலகத்திற்கே பொதுமையுடையது; போரும், பூசலும் இல்லாமல் இருக்கச் செய்வது. இவ்வுண்மை நூலை ஆழ்ந்து கற்பவருக்குத் தெளிவாகும்" (மணிவாசகன், 2013).

பக்தி இலக்கியத்தில் மொத்தம் பன்னிரெண்டு திருமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக விளங்குகின்றது (கிருஷ்ணன், 2009). இதனைத் தொடர்ந்து, திருமந்திரம் தமிழ் வேதாகம முழுமுதற் கருவூலமாகத் திகழும் நூலாகும். ஆக, இதனையே முதல் நூலாகக் கொண்டு மற்ற பதினொரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த நூற்களும் எழுந்தன என்பர் (நாராயணவேலுப்பிள்ளை, 1998).

திருமந்திரம் தத்துவக் கருத்துகள் முதல் யோகநெறி சித்த வைத்தியக் கருத்துகள் வரையில் பலவும் செறிந்துள்ள நூலாகக் கருதப்படுகின்றது (வரதராசன், 2009). திருமந்திரத்தில் உள்ள பாடல்கள் யாவும் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளன (இளவழகன், 2008). மேலே குறிப்பிட்டது போல திருமந்திரத்தின் பாடல்கள் அனைத்தும் பதி, பசு, பாசம் எனும் சைவ சிந்தாந்த கோட்பாட்டின் படி இயற்றப்பட்டவைகள் ஆகும்.

"பதி என்று பொருள்படுவது இறைவனாவான். இறைவன் என்பது சிவபெருமானைக் குறிக்கும் சொல். உண்மையை உணர்ந்தவர்கள் அதனைக் குறித்தற்கு இட்ட பெயர்கள் முதல்வன், முன்னவன், தலைவன், சிவம் அல்லது சிவன், இறைவன், கடவுள் என்பவனவாகும்" (இரவி, 2004). சிவன் என்பவன் ஒரு மாபெரும் சக்தி உடையவன். சிவபெருமானை எல்லையற்றவன், மாற்றம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இல்லாதவன், பகுக்க முடியாதவன், மாபெரும் அறிவுடையவன், சக்தியூட்டக்கூடியவன், ஒளி வடிவானவன், உயிர்களை வழிநடத்துபவன், அறிவின் விளிம்பு என்றெல்லாம் போற்றப்படுபவனாவான்.

தொடர்ந்து "பசு, உயிர், ஆன்மா, முதலிய சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பவைகளாகும். நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகர் 'பசு' என்ற இச்சொல்லை உயிர் என்று குறிப்பிடுகின்றார். இதனையே சைவசித்தாந்தம் உயிரினை இறைவனைப் போலவே வியாபகப் பொருள் எனக் குறிப்பிடுகின்றது. ஆகவே, பசு எனப்படுவது நல்வினைகளையும் தீவினைகளையும் செய்யும் சிற்றறிவுடைய பொருள் தான் உயிர் என்று சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது" (இரவி, 2004). எவற்றையும் சுயமாகச் சிந்தித்துச் செயல்படக்கூடிய வல்லமை பெறாதது உயிர் ஆகும். இதனைச் சைவசித்தாந்தம் திருவருட்பயன் நூல் மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனை அடுத்து "பாசம் எனப்படுவது 'தளை' என்றும் பொருள்படும். தளை என்பது உயிரின் வியாபகத்தைக் கட்டுப்படுத்தி உயிரைப் பிறப்பு இறப்புக்கு உட்படுத்துவதாகும். மேலும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று பொருள்களும் உயிரைக் கட்டுப்படுத்துவதால் பாசம் என்ற சொல்லைக் 'கட்டு' என்றும் அழைக்கப் படுகிறது. ஆணவம், கன்மம், மாயை என்பது மனித உடலில் இருக்கக் கூடாத மும்மலங்கள் ஆகும். இவற்றை உடலில் இருந்து நீக்கியப் பிறகே கடவுளை அடைய முடியும் என்பது சைவசித்தாந்தத்தில் கூறப்படும் கருத்து" (இரவி, 2004). ஆகவே, மயக்கத்தை ஏற்படுத்தும் பொருள் மீது காட்டும் ஆர்வத்தையே பாசம் என சைவசித்தாந்தம் கூறுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எனவே, திருவருட்பயனில் பேசப்படும் பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள்களில் 'பசு' அதாவது 'உயிர்' எனப்படும் கோட்பாடு அல்லது கொள்கை மட்டுமே இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திருமூலர் பாடல்களில் உயிர்க் கொள்கையைக் கண்டறிவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கம் ஆகும்.

## 1.3 ஆய்வுச் சிக்கல்

முப்பொருளின் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு திகழ்வது சைவசித்தாந்தம் ஆகும். பதி என்ற சொல் இறைவனையும் பசு என்ற சொல் உயிரையும் பாசம் என்ற சொல் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் குறிப்பிடுகின்றது. "சைவ இலக்கியங்கள் எனப்படுவன சைவ சாத்திரங்களும் தோத்திரங்களும் ஆகும். சைவ சாத்திரங்கள் 14 மற்றும் சைவ தோத்திரங்கள் 12 ஆகும்" (முருகவேள், 1984). "சாத்திர நூல்கள் பதினான்கும் திருமுறைகள் பன்னிரண்டும் சைவ சித்தாந்தத்தை விளக்குவனவாய் உள்ளன" (திருநாவுக்கரசு, 1967). பதி, பசு, பாசம் குறித்த செய்திகள்தான் பதினான்கு சாத்திரங்களிலும் பன்னிரு தோத்திரங்களிலும் பேசப்படுகின்றன என்பதனை இதன் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருப்பினும், முப்பொருள் உண்மை குறித்த செய்திகள் எந்தெந்த இடங்களில் காணப்படுகின்றன என்ற நுண்ணிய முறை ஆய்வு இதுவரை எவராலும் மேற்கொள்ளபடவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ந்து, திருமூலர் ஞானநெறி கொண்டவராவார். எனவே, அவர் இயற்றிய திருமந்திரத்தில் ஆறாம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தந்திர செய்யுள்களில் உயிரைப் பற்றிய கருத்துகளும் சிந்தனைகளும் மாறுபட்டிருக்க வாய்ப்புண்டு. இதுவே இவ்வாய்வின் சிக்கலாக அமைகின்றது. திருமூலர் இயற்றிய திருமந்திரத்தின் ஆறாம் தந்திரத்தில் பசுவின் இயல்புகள் எந்தெந்த இடத்தில் இடம்பெற்றுள்ளன? ஆறாம் தந்திரத்தின் 14 அதிகாரத்தில் எந்தெந்த பசுவின் இயல்புகள் வெளிப்படுகின்றன? மேலும், ஆறாம் தந்திர செய்யுள்களில் பசுவின் இயல்புகள் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவங்கள் யாவை? என்று ஆராய்வதே இவ்வாய்வின் மையம் ஆகும்.

## 1.4 ஆய்வின் முக்கியத்துவம்

தற்போதைய சூழலில் மலேசியாவில் தமிழ்மொழியின் பல்வேறு துறைகளில் பல ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. இருப்பினும்; திருமூலர், திருமந்திரம், சைவசித்தாந்தம், திருவருட்பயன் எனும் துறைகளில் ஆய்வுகள் அதிக அளவில் நடத்தப்படவில்லை. குறிப்பாகத் திருமந்திர செய்யுள்களில் ‘பசு’ கொள்கை எனும் அடிப்படையில் இதுவரையில் எந்த ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும் திருமூலர் இயற்றிய திருமந்திர செய்யுள்களில் ‘பசு’ தொடர்பான கருத்துகளை வெளிக்கொணரவும் இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டது.

சைவசித்தாந்த சாத்திரங்களில் பசுவின் பத்து இயல்புகளும் திருமூலர் இயற்றிய திருமந்திர செய்யுள்களில் இடம்பெறுகின்றனவா என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் குறிக்கோள் ஆகும். திருமூலரின் திருமந்திர செய்யுள்களில் சைவசித்தாந்த கோட்பாடான பசு இயல்புகள் இடம்பெறுகின்றனவா என்று

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆராய்வதன் வழி சைவசாத்திர நூல்களுக்கும் சைவதோத்திர நூல்களுக்கும் உள்ள தொடர்பினை அறியலாம். இந்த ஆய்வு திருவருட்பயனின் பசு இயல்பை திருமந்திர செய்யுள்களில் பொருந்திப்பார்க்கிறது.

மேலும், இவ்வாய்வின் வழி பசு (உயிர்) எனப்படுவது உருவத்தில் அமைந்திருக்கும் அருவம் என்பதனை உணர முடியும். ஆக, இந்த ஆய்வு அருவுருவத்தின் இலக்கணத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைகிறது. திருமந்திரம் பக்தி நூலாக இருப்பதால் அது சமயக் கருத்துகளை மட்டும் கொண்டில்லாமல் அருவுருத்திற்குப் பொருந்தும் வகையிலான வாழ்வியல் தத்துவங்களைக் கொண்டது என்பதனை இவ்வாய்வின் வழி உணர்த்தப்பட்டுள்ளன.

முடிவாக, திருமந்திரத்தில் பசு இயல்பினைக் கண்டறிந்து விளக்கியதன் வழி வழி அற நெறிக் கருத்துகளையும் அருள் நெறிக் கருத்துகளையும் மக்களுக்கு ஒருங்கிணைத்துக் காட்ட முடிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.5 ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் நோக்கமானது,

1. திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் பசுவின் இயல்புகளை அடையாளம் காணுதல்.
2. திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் கூறப்பட்டுள்ள பசுவின் இயல்புகளைத் திருவருட்பயன் கோட்பாட்டின் அடிப்படையில் பகுத்தாய்ந்து விளக்குதல்.
3. திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் பசுவின் இயல்புகள் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவங்களை விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு வினா

இவ்வாய்வின் வினாவானது,

1. திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் இடம்பெற்றுள்ள பசுவின் இயல்புகள் யாவை?
2. திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் கூறப்படும் பசு இயல்புகளின் பகுப்பு யாவை?
3. திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் பசுவின் இயல்புகள் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவங்கள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வு எல்லை

திருமூலர் இயற்றிய திருமந்திரம் மூவாயிரம் செய்யுள்களைக் கொண்டது. இம்மூவாயிரப் பாடல்களும் முறையே ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டும் உள்ளன. இவ்வாறு வகுக்கப்பட்ட திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களில் ஆறாம் தந்திர செய்யுள்களை மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும், இவ்வாறாம் தந்திர செய்யுள்கள் அனைத்தும் 14 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் இந்த 14 அதிகாரத்தின் அனைத்துச் செய்யுள்களுமே உட்படுத்தப்பட்டன. 'திருமந்திரத்தில் பசுக் கோட்பாடு' எனும் ஆய்வைத் தொடங்குவதற்கு முன், ஆய்வாளர் இத்தலிப்பில் முன்னோட்ட ஆய்வினை மேற்கொண்டார். அதன் வழி திருமந்திரத்தில் உயிரின் இயல்புகள் மற்ற தந்திரங்களைக் காட்டிலும் ஆறாம் தந்திரத்தில் தான் அதிகம் புலப்பட்டன. ஆகவே தான் இவ்வாறாம் தந்திரம் இவ்வாய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தொடர்ந்து, திருவருட்பயனில் பத்து அதிகாரங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் இரண்டாம் அதிகாரமான உயிரவை நிலை எனும் அதிகாரம் மட்டுமே இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டது. உயிரவை நிலை எனும் அதிகாரம் உயிரின் பத்து இயல்புகளை விளக்கும் வகையில் அமைந்திருக்கின்றது. இவ்வாய்வுக்கு அந்தப் பத்து இயல்புகளுமே பயன்படுத்தப்பட்டன.

பதி, பசு, பாசம் எனும் மூன்றில் பசு எனும் உயிர் இப்பூமியில் தான் பிறப்பெடுத்ததன் கடமையை உணர்ந்தால் மட்டுமே பாசம் எனும் மலத்தை அறுத்துப் பதி எனும் இறைவனை அடைய முடியும். இவ்விலக்கணத்திற்கு இணங்க

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



‘பசு’ எனும் உயிரின் கடப்பாடு முதன்மையாகக் கருதப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டே திருவருட்பயனின் ‘பசு’ எனும் இரண்டாம் அதிகாரம் இவ்வாய்வுக்கு முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 1.8 ஆய்வின் சான்றாதாரங்கள்

ஆய்வாளர் இவ்வாய்வு மேற்கொள்வதற்கு இரண்டு வகையான சான்றாதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார். அவை முதன்மைச் சான்றாதாரங்களும் துணைமைச் சான்றாதாரங்களும் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்கு இரண்டு முக்கிய முதன்மை சான்றாதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை திருமூலர் இயற்றி புலவர் அடியன் மணிவாசகன் அவர்கள் உறை எழுதிய திருமந்திர நூலும் உமாபதி சிவம் இயற்றி முனைவர் ஆ.ஆனந்தராசன் அவர்கள் உறை எழுதிய திருவருட்பயன் நூலும் ஆகும். இவ்வாய்வின் ஆணி வேறாகக் கருதப்படும் கருத்துக்கள் யாவும் இந்நூல்களில் இருந்தே பெறப்பட்டன. திருமந்திரம் மற்றும் திருவருட்பயன் நூட்களின் உறை நூல்களில் இவ்விரு அறிஞர்கள் எழுதிய உறையே எளிய முறையில் புரிந்துகொள்ளும் வகையில் இருந்தன. எனவே தான் இந்நூல்கள் இவ்வாய்வுக்கு முதன்மைச் சான்றாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வில் ஒன்றுக்கும் மேற்பட்டத் துணைமைச் சான்றாதாரங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை, திருமந்திரம் தொடர்பான மற்ற நூல்கள், குறிப்பு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்விதழ்கள் போன்றவைகளாகும். இவை அனைத்தும் இவ்வாய்வுக்குக் கூடுதல் கருத்துகளைத் தந்தது மட்டுமல்லாது துணைக்கோடலாகவும் அமைந்தன.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

இவ்வாய்வின் கலைச்சொற்களாகக் கருதப்படுபவை திருமந்திரம், சைவசித்தாந்தம், பதி, பசு, பாசம் ஆகும்.

### 1.9.1 திருமந்திரம்

திருமந்திரம் சங்க காலத்தில் எழுந்தருளிய பக்தி நூலாகும். இந்து சமயத்தை விளக்க வந்த முதல் நூலாகவும் இதனைக் கருதப்படுகின்றது (நாராயணவேலுப்பிள்ளை, 1998). மேலும், திருமந்திரத்தை நாராயணவேலுப்பிள்ளை அவர்கள்;

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


> "இந்நூல் சமய உண்மைகளையும் உலகியல் ஒழுக்கங்களையும் சாற்றுகிறது. திருக்கோயில் வழிபாடுகளையும் திருவுருவச் சிறப்புகளையும் செப்புகிறது. மந்திர மாண்பையும் சக்கர அமைப்பையும் அடியார் பெருமையையும் அழகுடன் எடுத்து ஓதுகிறது. சித்தாந்தம் என்ற தொடரை முதன்முதல் வழங்கியது இந்நூலே. தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூவகைப் பகுப்பும் அமைந்த ஒரே செந்தமிழ் நூல் இதுதான்".
>
> (நாராயணவேலுப்பிள்ளை.எம்,1998)

என்று தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

திருமந்திரம் எனும் சொல்லில் இருக்கும் 'திரு' எனும் சொல் தெய்வத் தன்மை வாய்ந்தது என்று பொருள்படும். மேலும், 'மந்திரம்' எனும் சொல் மறைப்பொருள் என்று பொருள்படும். இக்கருத்தினை மேலும் வலுப்படுத்தும் வகையில் திருவள்ளுவர் இயற்றிய உலகப் பொதுமறை நூலான திருக்குறளைச் சான்றாகக் கொள்ளலாம். 'மந்திரம்' எனும் சொல்லின் விளக்கத்தை இரண்டே வரியில் குறிப்பிட்டிருக்கும் ஞானியான திருவள்ளுவரைப் போன்று வேறொருவர் இப்புவியில் இல்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும் (குறள் : 28)

இக்குறளில் மந்திரம் என்பதை மறைமொழி என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே, திருவருளை வேண்டி நிற்கும் மறைமொழிகள் கொண்டப் பாடல்களின் தொகுதிக்கே 'திருமந்திரம்' என்ற பெயர் ஆகுப்பெயராக வந்துள்ளது (கார்த்திகேஸ் பொன்னையா, 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எனவே, நாராயணவேலுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடும் கருத்தான ‘திருமந்திரம் என்பது தெய்வத் தன்மை வாய்ந்த மறைப்பொருள்’ என்பதனையே இவ்வாய்வுக்குத் துணைக்கோடாகப் பயன்படுத்தப்பட்டது.

### 1.9.2 சைவசித்தாந்தம்

“ ‘சைவம்’ என்பது ‘சிவம்’ என்ற செந்தமிழ்ச் சொல்லின் அடியாகப் பிறந்தது. சிவனோடு தொடர்பு உடையது சைவம், ‘சிவ’ என்னும் சொல்லில் உள்ள சகர ஓசை வடமொழியில் இல்லை, அச்சொல் செம்மை என்பதன் அடியாகத் தோன்றியது. அது சிவப்பு, நன்மை, மங்கலம் என்னும் பொருள்களை உடையது” (வைத்தியநாதன், 1992). சைவம் என்ற சொல் சிவத்தின் வழி பிறந்த சொல் ஆகும். இவ்விரண்டு சொல்லிற்கும் எந்த ஒரு வேறுபாடும் இல்லை என்பது அறிந்து கொள்ள முடிகின்றது.

“ ‘சித்தாந்தம்’ என்னும் சொல் முடிந்த முடிபு என்னும் பொருளைத் தரும். அதாவது, பல கோணங்களிலிருந்து ஆய்வு செய்யப்பட்டுத் தருக்க நூல் அடிப்படையில் நிறுவப்பட்ட முடிவு என்பது இதற்குப் பொருளாகும்” (வைத்தியநாதன், 1992). சிவனடி சேர்தற்கு உரிய நெறியையும் சிவபெருமானைப் பற்றிய நிலையையும் மிகவும் துல்லியமாகக் குறிக்கும் நூல் சைவசித்தாந்த நூலாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சைவசித்தாந்தம் என்னும் நூல் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளை விளக்குவனவாகும். "பதி, பசு, பாசம் என்பனவற்றை முறையே இறை, உயிர், தளை, எனத் தமிழில் வழங்குவர்" (முருகவேள், 1984). எனவே முப்பொருளை விளக்குவன சைவசித்தாந்தம் என்பது பொருளாகும்.

## 1.10 தொகுப்புரை

இந்த இயல் இவ்வாய்வைப் பற்றிய அறிமுகமாக அமைந்துள்ளது. ஆய்வின் பின்னணி, சிக்கல், முக்கியத்துவம், நோக்கம், வினாக்கள், எல்லை, மூலம் மற்றும் ஆய்வின் தலைப்பில் காணப்படும் முக்கியக் கலைச் சொற்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi